**O.S.No. 33/2014 PW1 – காமாட்சிபெரியசாமி (எ) கோகுல் 03.08.2023**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தளவாப்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் கரூர், சேரன்மெட்ரிக்குலேசன் பள்ளியில் 8ம் வகுப்பு வரை படித்தேன், 9 மற்றும் 10 வகுப்புகளை முத்தூரில் படித்தேன், 11, 12 வகுப்புகளை கொங்கு வெள்ளாளர் பள்ளியில் படித்தேன். நான் கோயம்புத்தூரில் கல்லூரி படிப்பை படித்தேன். நான்கோயம்புத்தூரை சேர்ந்தவரை கரூரில் பதிவு திருமணம் செய்தேன். எனக்கு திருமணத்திற்கு பிறகும், மது அருந்தும் பழக்கம் இருந்தது. தற்போது என் குடிப்பழக்கத்தை குறைத்துவிட்டேன். எனது சுயகட்டுப்பாட்டின் மூலம் அதை குறைத்துவிட்டேன். எனது நண்பர்களுடன் சேர்ந்தால் அதிகமாக மது அருந்துவேன். எனது திருமணம் எனது குடும்பத்தினருடன் சம்மதத்துடன் நடக்கவில்லை. அதனால் என் அம்மாவிற்கும் சரியான பேச்சுவார்த்தை கிடையாது. 09.07.2011 அன்று என் அம்மா, வெங்கமேடு காவல்நிலையத்தில் நான் காணாமல் போய்விட்டேன் என புகார் கொடுத்தார். அந்த புகார் விசாரணைக்கு நான் காவல்நிலையத்திற்கு சென்றேன். அந்த விசாரணையில், என்னை யாரும் கடத்தவில்லை என சொல்லியுள்ளேன். அதனால் என் அம்மா கொடுத்த புகாரை வாபஸ் பெற்றுவிட்டார். எனது கல்லூரி படிப்பிற்கு என் அம்மாவும், என் உறவினர்களும் பணம் கொடுத்தனர். என் அம்மா கொடுத்த புகார் மீது வெங்கமேடு காவல் ஆய்வாளர் திரு.எம்.குணசேகரன் என்பவர் விசாரித்தார். அவரை விசாரித்தால், அந்த புகார் விசாணையில் என்ன நடந்தது என்பது தெரியும். நான் 08.07.2011 அன்று பிரதிவாதி பெயருக்கு மூன்று கிரய ஆவணங்கள் எழுதிக்கொடுத்தேன். அந்த கிரய ஆவணங்களை சுய நினைவில்லாமல் எழுதிக்கொடுத்தேன். அந்த கிரய ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பு நான் கோயம்புத்தூரில் இருந்து வந்தேன். கிரயத்தன்று நான் காலையில் கரூருக்கு வந்தேன் என்றால் என்னை வலுக்கட்டாயமாக கடத்தி கொண்டு வந்தனர். அந்த மூன்று கிரய ஆவணங்களில் இரண்டு கிரய ஆவணங்கள் மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்திலும், ஒரு கிரய ஆவணம் கரூர், இணை சார்பதிவாளர் அலுவலகத்திலும் பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் பிரதிவாதி பெயரில் உள்ள 08.07.2011 தேதியிட்ட மூன்று கிரய ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதல்ல. மேற்சொன்ன ஆவணங்களில் 40 தாள்களில் உள்ள கையெழுத்துக்களை நான்தான் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன கிரய

ஆவணத்தை என்ன நிலையில் நான் எழுதிக்கொடுத்தேன் என்ற விவரம் பதிவாளரை விசாரித்தால் தெரியும். என்னை பிரதிவாதி கடத்திவிட்டார் என 19.07.2011 அன்று குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் என் அம்மா வெங்கமேடு காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மற்றும் அதில் நடந்த விசாரணை பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு எதிராக குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் கொடுத்த புகார் என்ன ஆனது என்றால் அந்த புகாரின் மீது விசாரணை நடந்து வருகிறது. குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் நடந்த விசாரணைக்கு நான் சென்றேன். அந்த விசாரணையில், நடராஜன், மோகன்ராஜ், பிரபு ஆகியோர்களை போலீசார் விசாரித்தனர். கிரய ஆவணம் பதிவு செய்த மேலக்கரூர் சார்பதிவாளரை போலீசார் விசாரித்தனரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,<br>
முதன்மை மாவட்ட நீதிபதி,<br>
கரூர்.